மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT
No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 02 | குரல்: 135 | வள்ளுவர் ஆண்டு 2054 | செவ்வாய்க்கிழமை 16.01.2024 | ...08

# சம்பந்தனின் ஆதரவு ரணில் அரசுக்கு தேவையில்லை! ஆளும் தரப்பு சூளுரை!



பக்கம்–07

# தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப்படும்: உறுதியளித்த பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர்!



பக்கம்–07

# சிட்னியில் பழங்குடி அபரோஜின மக்களுடன் பொங்கல் விழா!



பக்கம்–05



# ஆசிரியர் பீடம்



தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## ஏற்றுக் கொள்ள மறுக்கும் சமூகம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தமிழர்கள் மீது நடத்திய போரும் அதற்காகச் செலவிட்ட பெருந்தொகைப் பணமும்தான் காரணம் என்பதனை நாம் ஒவ்வொருவரும் மறந்துவிடுகிறோம். நாம் மறந்து விடுவது பரவாயில்லை என்றாலும் பெரும்பான்மை சமூகம் மறப்பதுதான் வேடிக்கை. இதற்குத்தான் கணக்குப் பார்க்க வேண்டும் என்று சொல்வார்கள்.

ஏற்கனவே வற்வரி விதிக்கப்பட்டிருந்தாலும் 2019ஆம் ஆண்டில் 69லட்சம் பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியான கோத்தபாய ராஜபக்ச வற்றை 8 வீதமாக குறைத்திருந்தார். அதே நேரத்தில் வருமான வரி செலுத்துவதற்கும் பல விலக்களிப்புகளைக் கொடுத்திருந்தார். இந் நடவடிக்கை ஒரு பெருந்தொகை வருமான இழப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், 2022 ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க வற் வரியை 15 வீதமாக மாற்றியிருந்தார். ஆனால் இவ்வருடம் முதல் அது 18 வீதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கும் ஜனாதிபதிக்கும் ஆதரவான தரப்புகள் வெறும் 3 வீதமே அதிகரிப்பு என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போகும் நிலை ஒன்று இருக்கிறது. ஆனால், கடந்த காலங்களில் இருந்ததனைவிடவும் இம்முறை மேலதிகமான பொருட்கள் வற் வரிக்குள் வந்து சேர்ந்திருக்கின்றன. அதாவது பாடசாலை உபகரணங்கள் அடங்கலான அத்தியாவசியப் பொருட்கள் இதற்குள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆடம்பரத்துக்கான, கட்டாயமற்ற, தேவையற்ற என்றிருந்த நிலை மாறி அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்துபவர்களும் இதிலிருந்து தப்பிக்கமுடியாத நிலைமை தோன்றியிருக்கிறது. இதனை மிகச் சாதாரணமாக யாரும் கடந்துவிடமுடியாது என்பதே இதன் தார்ப்பரியம். இதுதான் இலங்கை அரசு மக்களுக்குக் கொடுத்திருக்கின்ற புத்தாண்டுப் பரிசு.

இந்தப் பரிசை காலாகாலமாக தங்களது உரிமைக்காகப் போரடிய தமிழர்களும் சேர்ந்துதான் அனுபவிக்கவேண்டிய நிலை. இந்தக் கடுமையான வரியை தங்கள் சக்திக்கு மீறி ஏற்றுக் கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலங்களில் வெளிநாடுகளில் கடன்களையும் உதவிகளையும் குவியல் குவியலாகப் பெற்றுக் கொண்ட அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கொட்டித் தீர்த்தது. தன் சொந்த நாட்டு மக்கள் மீதே கொத்துக் குண்டுகளையும், எறிகணைகளையும் வீசி, விமானங்கள் மூலமாகத் தாக்குதல்களை நடத்தி அவர்களது வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் அழித்திருந்தது.

2009 யுத்தம் மொனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் அக்கடன்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதில் ஏற்பட்ட சிக்கல் கடைசியில் இறுமாப்புடன் சேர்ந்து எதுவும் செய்யமுடியாத நிலையைத் தோற்றுவித்தது. இறுதியில் நாமும் சேர்ந்தே அக்கடன்களை அடைக்கவேண்டியதாகியிருக்கிறது.

அரகலய நடைபெற்ற போது நாம் இதற்குள் எதற்கென்று ஒதுங்கியிருக்கும் மனோநிலையிலேயே தமிழர்கள் இருந்தனர். ஆனால், அதன் பின்னர் ஏற்பட்ட நிலைமையின் கோரம் சேர்த்துக் கொண்டே நம்மை நெருக்குகிறது. விரும்பினாலும், விருப்பமில்லையானாலும், ஏற்றுக்கொண்டாலும் இல்லையானாலும் நம்மீது தொடுத்த போரின் சுமையையும் நாமே சேர்ந்து சுமக்கவேண்டியிருக்கிறது என்பதே உண்மை.

இருந்தாலும் அதற்காக ஏற்பட்ட செலவை சீர் செய்வதற்கும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் புலம்பெயர் தமிழர்களையே பெரும்பாலும் எதிர்பார்க்க வேண்டிய நிலை ஆட்சி பீடத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றாலும், உலக வங்கியிடம் கடன் பெற்றாலும் அதனை அடைக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வருவரிடமும்தான் இருக்கிறது என்பதனை நாம் ஒவ்வொருவருவரும் மறந்துவிடலாகாது.

ஆனாலும், வருமானமின்றி வரியைச் செலுத்த வேண்டும். பெரும் இன்னல்களை எதிர்கொள்கிறோம் இருந்தாலும், இனவாதத்தை மாத்திரம் விட்டொழிக்கமாட்டோம் என்பவர்களிடம் நாம் எதனை எதிர்பார்க்கிறோம்.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி : +94 76 567 3339



# பகவத்கீதை சுலோகங்கள் கூறுதல் தேசிய மட்டப் போட்டியில் முதலிடங்களைப் பெற்ற மட்டக்களப்பு மாணவர்கள்!



இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தினால் தேசியமட்டத்தில் நடாத்தப்பட்ட பகவத்கீதை சுலோகங்கள் கூறுதல், பகவத்கீதையை விளங்கிக் கொள்தல், போன்ற தலைப்புக்களில் நடாத்தப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இரண்டு முதலிடங்களும், ஒரு இரண்டாம் இடமும் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இதில் மட்டக்களப்பு மாவட்டம் கற்சேனைக் கிராமத்தைச் சேரந்த கண்ணன் திவானுஜன், மற்றும் ஆரையம்பதியைச் சேர்ந்த கிருஷ்ணராஜா கதிஸ்பிரணாத் ஆகிய இருமாணவர்களும் இருபோட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு தலா ஐம்பதினாயிரம் பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதுபோல் மற்றுமொரு போட்டியில் கலந்து கொண்ட கற்சேனைக் கிராமத்தைச் சேர்ந்த விதுசன் சதுசனா இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, அவருக்கு முப்பத்தினாயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்குரிய பரிசுகள் அண்மையில் இந்திய தூதுவரால் கொழும்பில் அமைந்துள்ள இந்திய கலாசார நிலையத்தில வைத்து வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

# ராஜபக்சாக்களே தமிழர்களின் நின்மதியை அடியோடு கெடுத்தனர்!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் நின்மதியாக வாழ்வதற்கு ராஜபக்சாக்கள் தான் காரணம் என ஒரு பொய்யான கருத்தை ஊடகங்களில் முன்வைத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

தென்னிலங்கையில் ராஜபக்சாக்களின் வாக்கு வங்கி பாரிய அளவில் வீழ்ச்சி கண்டுவரும் நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கையில் சிங்கள மக்களின் வாக்குகள் மூன்றாக பிரிவடையும் அபாயம் உள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் வெளிவரும் நிலையில் பெரமுனவின் வேட்பாளரின் வெற்றி கேள்விக்குள்ளாகும் நிலையில் தமிழர்கள் மீது ஒரு கரிசனை மகிந்தவுக்கு திடீரென ஏற்பட்டுள்ளது.

ராஜபக்சக்களை ஒரு போதும் ஈழத் தமிழர்கள் ஆதரிக்க வில்லை 2005 ஆண்டு வடகிழக்கில் தேர்தலை நிராகரிக்கும் போது மகிந்த ஜனாதிபதியானார் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின்னர் 2010 ,2015, 2019 மூன்று தடவைகளிலும் ராஜபக்சாக்களை தமிழர்கள் ஆதரிக்கவில்லை ஆகவே எந்தவெரு தேர்தல்களிலும் ராஜபக்சாக்களை தமிழர்கள் ஆதரிக்கவில்லை என்றால் சாதாரண மனிதனுக்கும் விளங்கும் தமிழர்களின் நின்மதியை கெடுத்தவர்கள் ராஜபக்ச குடும்பம் தான் என்ன உண்மை இதனை மறைத்து நீலிக்கண்ணீர் வடிக்கிறார் மகிந்த ராஜபக்ச.

ராஜபக்ச குடும்பம் தமிழர்கள் மீது ஒரு பாரிய இனவழிப்பு நடாத்தி விடுதலைப் போராட்டத்தை அழித்ததை வரலாற்றில் ஈழந் தமிழர்கள் மறக்கவும் மாட்டார்கள் மன்னிக்கவும் மாட்டார்கள்.



# அழிவுகளை முன்னாயத்தமாக முறியடிக்கும் யுக்தித் திட்டமிடல் அனைத்துத் தரப்பிலும் இருக்க வேண்டும்!



காலத்துக்கு காலம் அவ்வப்போது சுழற்சியாக இடம்பெறும் இயற்கை, செயற்கை இடர், அழிவு நாச வேலைகள் என்பனவற்றுக்காக நிவாரணம் வழங்குவதும் நிவாரணத்தைப் பெறுவதும் மாத்திரம் நமது பணியாக இருக்கக் கூடாது. என தான் சமூகம் சார் வேண்டுகோளை விடுப்பதாக சுற்றுச் சூழல் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபடும் தன்னார்வ உதவு ஊக்க அமைப்பான இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

சமீபத்திய சீரற்ற வானிலை, அடை மழை பெரு வெள்ளம் தொடர்பாக மக்கள் நிர்க்கதிக்குள்ளாகியிருப்பது குறித்து கேட்டபோதே அவர் இவ்விடயங்களைக் குறிப்பிட்டுக் காட்டினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

பாதிக்கப்பட்ட பின்னர் அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நிவாரணம் வழங்கும் கலாசாரத்தையும், மக்கள் நிவாரணங்களைப் பெற முண்டியடிக்கும் கலாசாரத்தையும் மாற்றியமைக்க வேண்டும்.

அழிவுகள் இடம்பெறுவதற்கு முன்னர் அவதானமாக இருந்து அந்த அழிவுகளை முன்னாயத்தமாக முறியடிக்கும் யுக்தித் திட்டமிடல் அனைத்துத் தரப்பிலும் இருக்க வேண்டும்.

துரதிருஷ்டவசமாக முன்னாயத்தம், முன்னெச்சரிக்கை, தற்காப்பு என்பன போன்ற விடயங்களில் இன்னமும் மக்கள் தயார்படுத்தப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

காலாகாலமாக எதிர்கொள்ளும் வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்களுக்கும், அவ்வப்போது மனிதனால் உண்டாக்கப்படும் மனித நாச அழிவு வேலைகளையும் தடுக்கக் கூடிய யுக்தித் திட்டமிடல் பொறிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும். இதில் எல்லோரும் ஈடுபட வேண்டும்.

எல்லோரும் என்று கூறும்போது இளைஞர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள், நிறுவனங்களைச் சார்ந்தோர்கள். பொலிஸார், சுகாதாரத் துறையினர், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், மத அமைப்புக்களைச் சார்ந்தவர்கள், விளையாட்டுத் துறையைச் சார்ந்தவர்கள் என்பதோடு முக்கியமாக அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இதில் உள்ளடங்குவார்கள்.

எல்லோருமாக ஒருங்கிணைந்தால்தான் இந்த இயற்கையைச் சீரமைத்து அது உண்டாக்கும் அபாயத்திலிருந்து வெளி வர முடியும்.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை இப்பொழுது அருகி வருகிறது. இயற்கை மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. வாழ்வைக் கற்றுக்கொடுக்கிறது. இயற்கை இல்லை என்றால் மண்ணில் ஈரமில்லை விளைச்சலில்லை அறுவடையில்லை மனித வாழ்க்கை இல்லை. ஏன் உயிரினங்களும் கூட இல்லை.

இயற்கைதான் உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் வாய்ப்பை வழங்கி வருகிறது.

இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படுகின்ற இடர் அபாயங்களைக் கண்டறிந்து சமூகத்திலும், தேசத்திலும் பாதுகாப்பு பயன்பாடு ஒன்றை உருவாக்கி பாரிய அளவில் சமூகத்தில் நின்று நிலைக்கக் கூடிய அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

இடர்கள் எல்லா அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பாரதூரமான அச்சுறுத்தல்களை நிலைக்கச் செய்கின்றது. அழிவாக உயிர்ப்பலிகளும், ஏனைய சேதங்களும் ஏற்படுகின்றன. சிலபோது பௌதீக, சூழல் பொருளாதார நாசங்களும் உண்டாகின்றன. அவை சமூக உறுதிப்பாட்டினை வலுவிழக்கச் செய்வதோடு இடர்களை எதிர்கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிப்படைந்து மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவது மிகவும் கடினமானதொன்றாக மாறிவிட்டிருப்பதையே கடந்த கால அனுபவங்களில் கண்டிருக்கின்றோம்.

எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பான, பழுதற்ற உலகை விட்டுச் செல்வோம் என்ற எண்ணத்துடன் ஆர்வலர்கள் அங்கலாய்க்கிறார்கள் ஆதங்கப்படுகின்றார்கள். அதுவே முதன்மைப் பணியாக இருக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். வல்வையில் இடம்பெற்ற மாபெரும் பட்டத்திருவிழா!

யாழில் தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு ஆண்டுதோறும் கொண்டாடப்படும் ராட்சத பட்டத்திருவிழா இடம்பெற்றுள்ளது. குறித்த பட்டத்திருவிழாவானது நேற்றைய தினம்(15.01.2024) நடைபெற்றுள்ளது. யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் இடம்பெற்ற பட்ட போட்டியில் பலவிதமான வண்ணங்களில் விசித்திர பட்டங்கள் செய்து அதனை போட்டியாளர்கள் பறக்க விட்டுள்ளனர்.



# சிட்னியில் பழங்குடி அபரோஜின மக்களுடன் பொங்கல் விழா!



தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழா அவுஸ்திரேலிய பழங்குடி அபரோஜின மக்களுடன் இணைந்து சிறப்புற இன்று சிட்னியில் நடை பெற்றது.

நியு சவுத்வேல்ஸ் மாநில தமிழ் மக்கள் சார்பாக, அனைத்து தமிழ் வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், பன்னாட்டு தமிழ் மக்களின் ஆதரவோடு ”பொங்கல் திருவிழா” நிகழ்வு சிறப்புற Holroyd Gardens> Merrylands> எனும் பூந்தோட்டத்தில் இன்று மாலை நடைபெற்றது.

இப்பொங்கல் நிகழ்வானது, உலகெங்கும் பரவி வாழும் புலம்பெயர்த் தமிழர்கள் தமிழ் மொழியால், தமிழ் இன உணர்வால், தமிழ்ப் பண்பாட்டால் தன்னார்வமாக ஒன்றுகூடும் நிகழ்வாக மிகச் சிறப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

இன்றைய கூட்டுப் பொங்கல் நிகழ்வில் கோலப் போட்டி, வீட்டு விலங்குகள் காட்சிப்படுத்தல் (Animal Farm) மற்றும் சிறுவர் பொழுதுபோக்கு நிகழ்வு (Jumping Castle)> தமிழ்க் கலை நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

அத்துடன் தமிழர் விளையாட்டுகள், பழம் பொறுக்குதல், இசை நாற்காலி, தடை ஓட்டம், உறி அடித்தல் (முட்டி உடைத்தல்), சாக்கு ஓட்டம், தேசிக்காய் ஓட்டம் , கிளித்தட்டு, கயிறு இழுத்தல், கபடி போன்றவை, சிறிய அளவிலான மத்தாப்புக் காட்சி (Miniature Fireworks) போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந் நிகழ்வில் இளையோர்கள் மற்றும் பெரியவர்கள் பங்குகொண்ட பொங்கல் நடனங்கள் உட்பட விசேட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அத்முடன் இந்நிகழ்ச்சியில் நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தில் 2023 இல், தமிழ் மொழியில் சித்தியடைந்த உயர்தர (HSC) மாணவர்களுக் கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு மாகாணத்தின் சேவைகளை பாராட்டிய IMF!



சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) குழுவினர் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களை சந்தித்து கலந்துரையாடல் மேற் கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள், வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணம் குறுகிய காலத்தில் அடைந்து வரும் வளர்ச்சிக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் பீட்டர் ப்ரூயர் (சிரேஸ்ட பணித் தலைவர்), சர்வத் ஜஹான் (ஐஆகு வதிவிடப் பிரதிநிதி), சோபியா ஜாங் (சிரேஸ்ட பொருளாதார நிபுணர்), /ஹய் மியாவ் (சிரேஸ்ட நிதித்துறை நிபுணர்), ஹோடா செலிம் (சிரேஸ்ட பொருளாதார நிபுணர்), டிமிட்ரி ரோஸ்கோவ் (சிரேஸ்ட பொருளா தார நிபுணர்), சந்தேஸ் தூங்கானா (பொருளாதார நிபுணர்), மற்றும் மனவே அபேயவிக்ரம (உள்ளூர் பொருளாதார நிபுணர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மொட்டுக்கட்சியின் வேட்பாளர்! மகிந்தவின் தீர்மானத்தில் திடீர் மாற்றம்!



எதிர்வரும் அதிபர்த் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தாமல் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளும் காணப்படுவ தாக அக்கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க தேசிய வேட்பாளராகப் போட்டியிடுவார் என கூறுகிறீர்களா என மகிந்த விடம் வினவப்பட்டபோது அதற்கு அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் என மகிந்த பதிலளித் துள்ளார்.

அப்படி என்றால் உங்களுடைய வேட்பாளர் யார் என மகிந்தவிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை, ஒருவேளை எங்கள் கட்சியில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படவும் கூடும் நிறுத்தப்படாமலும் இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசியம் THESIYAM
தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 +94 77 149 9094

# தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப்படும்: உறுதியளித்த பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர்!



சுயநிர்ணய உரிமை, உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கான தமிழர்களின் போராட்டத்திற்கும் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தைப் பொங்கலை முன்னிட்டு பிரித்தானிய தமிழ் சமூகத்திற்கு வாழ்த்து தெரிவித்துள்ள அவர், எமது நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார கட்டமைப்பிற்கு அவர்கள் ஆற்றிய பல பங்களிப்பு களையும் அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

கல்வி, மருத்துவம், வணிகம், கலை, இலக்கியம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அவர்களின் பங்களிப்புகள் தமிழ் சமூகத்தையும் நாட்டையும் வலிமையாக்கியுள்ளதாகவும் உலகம் முழுவதிலு மிருந்து வந்துள்ள தமிழ் மாணவர்களின் கடின உழைப்புக்கு வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் சுயநிர்ணயம், சமாதானம் மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் ஆற்றிய தியாகங் களை நாம் நினைவுகூர வேண்டிய தருணமும் இது என்றும் பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஆதரிப்பதில் இலங்கை அரசாங்கம் இனியும் தாமதிக்காது என்பதை உறுதிசெய்ய தொழிற்கட்சி தொடந்து அழுத்தத்தை பிரயோகிக்கும் என்றும் பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# சம்பந்தனின் ஆதரவு ரணில் அரசுக்கு தேவையில்லை! ஆளும் தரப்பு சூளுரை!



சம்பந்தனின் ஆதரவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோ ரணில் விக்ரமசிங்கவிற்கு தேவை யில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

“வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பில் ரணில் விக்ரமசிங்க வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ரணில் விக்ரமசிங்கவிற்கும், அரசுக்கும் ஆதரவு வழங்கத் தயார்“ - என இரா.சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “ரணில் விக்ரம சிங்கவிடம் நிபந்தனைகளை முன்வைத்து அவருக்கும் அரசுக்கும் ஆதரவு வழங்குவது போல் பாசாங்கு செய்து தங்கள் காரியங்களை நிறைவேற்ற சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிக்கின்றனர்.

அவர்களின் வியூகம் ரணில் விக்ரமசிங்கவுக்கும் தெரிந்த விடயம். எனவே, சம்பந்தனின் ஆதரவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோ ரணில் அரசுக்குத் தேவையில்லை.

அபிவிருத்தியில் அதிகூடிய கவனம் எடுத்துச் செயற்படும் ரணில், அதற்கான இலக்கை அடையும் தருவாயில் அரசியல் தீர்வுக்கான செயற்றிட்டங் களையும் முன்னெடுத்து அதிலும் வெற்றி காண்பார். இதற்குத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.“ என்றார்.




அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS



- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.

We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |






**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME